# இரு சுடரும் என் வாழ்வும் 11

**காலை**

ஒளியைக் கண்டேன் கடல் மேல் - நல்
உணர்வைக் கண்டேன் நெஞ்சில்!
நெளியக் கண்டேன் பொன்னின் - கதிர்
நிறையக் கண்டேன் உவகை!
துளியைக் கண்டேன் முத்தாக் - கனி
துள்ளக் கண்டேன் விழியில்
தெளியக் கண்டேன் வையம் - என்
செயலிற் கண்டேன் அறமே!

**மாலை**

மறையைக் கண்டேன் கதிர்தான் - போய்
மாயக் கண்டேன் சோர்வே!
நிறையக் கண்டேன் விண்மீன் - என்
நினைவிற் கண்டேன் புதுமை!
குறையக் கண்டேன் வெப்பம் - எனைக்
கூடக் கண்டேன் குளிர் தான் - மேல்
ஓங்கக் கண்டேன் வாழ்வே

- பாரதி தாசன் -



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**பின்வரும் சொற்களுக்கான சிங்களச் சொற்களை எழுதுங்கள்.**
**පහත සඳහන් වචනවලට සිංහල වචන ලියන්න.**

ஒளி - ---------------------------------------
கண்டேன் - ---------------------------------------
கடல் - ---------------------------------------
மேல் - ---------------------------------------
நல்ல - ---------------------------------------
உணர்வு - ---------------------------------------
நெஞ்சில் - ---------------------------------------
நெளிய - ---------------------------------------
நிறை - ---------------------------------------
துளி - ---------------------------------------
துள்ள - ---------------------------------------
தெளிய - ---------------------------------------
செயல் - ---------------------------------------
பொன் - ---------------------------------------
உவகை - ---------------------------------------
வழி - ---------------------------------------
வையம் - ---------------------------------------
அறமே - ---------------------------------------
மறைய - ---------------------------------------
மாய்தல் - ---------------------------------------
நிறைய - ---------------------------------------
நினைவு - ---------------------------------------

## செயற்பாடு I

1 காலையில் நீங்கள் பார்த்து இரசித்தவற்றை அட்டவணைப்படுத்துங்கள்.
2 மாலையில் நீங்கள் பார்த்து இரசித்தவற்றை அட்டவணைப்படுத்துங்கள்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**கிரகித்தல் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.

1. ஓங்கக் கண்டது எது?
2. செயலில் இருந்தது எது?
3. காலையில் நிறைந்தது எது?
4. மாலையில் நிறைந்தது எது?
5. மாலையில் மறைந்தது எது?

## செயற்பாடு II

**எதிர் கருத்துச் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.**
විරුද්ධ පද යොදා හිස්තැන් පුරවන්න.

| மறமே, தோன்றக், இருளைக், நிறையக், வெப்பம் |
|---|

1. ஒளியைக் கண்டேன்.
   --------------------------- கண்டேன்.

2. செயலிற் கண்டேன் அறமே.
   செயலிற் கண்டேன். ------------------

3. கூடக் கண்டேன் குளிர்.
   கூடக் கண்டேன். -------------------

4. குறையக் கண்டேன் உவகை.
   -------------------- கண்டேன் உவகை.

5. மறையக் கண்டேன் கதிர்தான்.
   ----------------------- கண்டேன் கதிர்தான்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

### செயற்பாடு III

- கவிதையில் தரப்பட்டுள்ள காலைக் காட்சியையும் மாலைக் காட்சியையும் விளங்கிச் சித்திரமாக வரையுங்கள்.
- கவிதை நடையில் வாசித்துப் பழகுங்கள்
- காலைக்காட்சியையும் மாலைக்காட்சியையும் பற்றிய சிறுபேச்சொன்றினைத் தயாரித்துப் பேசுங்கள்.
- காலைக்காட்சி, மாலைக்காட்சி பற்றி 5 வாக்கியங்கள் எழுதுங்கள்.

### எதிர்க்கருத்துச் சொற்களைக் கற்போம்

විරුද්ධ පද ඉගෙන ගනිමු

| | | |
|---|---|---|
| காலை | - | மாலை |
| மேல் | - | கீழ் |
| ஒளி | - | இருள் |
| நிறைதல் | - | குறைதல் |
| புதுமை | - | பழமை |
| வெப்பம் | - | குளிர் |
| அறம் | - | மறம் |
| பொய் | - | மெய் |
| இளமை | - | முதுமை |
| இரவு | - | பகல் |
| விண் | - | மண் |
| சின்ன | - | பெரிய |

### எதிர்ப்பாற் சொற்கள்

විරුද්ධ ලිංග පද ඉගෙන ගනිමු

| | | |
|---|---|---|
| தலைவன் | - | தலைவி |
| நடிகன் | - | நடிகை |
| தந்தை | - | அன்னை |
| மாமா | - | மாமி |
| பாடகன் | - | பாடகி |
| குருடன் | - | குருடி |
| கணவன் | - | மனைவி |
| மாணவன் | - | மாணவி |
| அரசன் | - | அரசி |


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## ஒத்தக் கருத்துச் சொற்களைக் கற்போம்

සමාන පද ඉගෙන ගනිමු

| | | |
|---|---|---|
| கண் | - | விழி |
| பெண் | - | மாது / மங்கை |
| கள்வர் | - | திருடர் |
| நிலா | - | மதி / சந்திரன் |
| அன்னை | - | தாய், அம்மா |
| சொல் | - | பதம் |
| தோழன் | - | நண்பன் |
| வையகம் | - | உலகம் |
| விண்மீன் | - | நட்சத்திரம் |
| ஒளி | - | வெளிச்சம் |
| உவகை | - | மகிழ்ச்சி / களிப்பு |
| கதிரவன் | - | சூரியன் |
| வெப்பம் | - | சூடு |
| இல்லம் | - | வீடு |
| வேந்தன் | - | மன்னன் / அரசன் |
| சினம் | - | கோபம் |
| கடல் | - | சமுத்திரம் |
| அவலம் | - | துன்பம் |
| ஆணை | - | கட்டளை |
| மின்னின | - | ஒளிர்ந்தன |
| சேவை | - | தொண்டு |
| சித்திரம் | - | ஓவியம் |
| தானம் | - | கொடை |
| அலை | - | திரை |
| துயர் | - | துன்பம் |
| அன்பு | - | நேயம் |
| உண்மை | - | மெய் / சத்தியம் |
| காடு | - | வனம் |

## செயற்பாடு IV

**ஒத்த கருத்துடைய சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோம்.**

සමාන පද තෝරා ලියමු.

> சாப்பாடு, எழில், வனம், நூல், ஆகாரம், ஆகாயம், ஏடு, வனப்பு, வனாந்தரம், விண்

(உ + ம் ) தாய் மாதா அன்னை

1.

| | | |
|---|---|---|
| உணவு | --------------------- | --------------------------- |
| புத்தகம் | --------------------- | --------------------------- |
| வானம் | --------------------- | --------------------------- |
| காடு | --------------------- | --------------------------- |
| அழகு | --------------------- | --------------------------- |

## செயற்பாடு V

**பின்வரும் சொற்களுக்குரிய எதிர்பாற்சொற்களை எழுதுவோம்.**

විරුද්ධ ලිංග පද ලියමු.

**(உ + ம்) அம்மா - அப்பா**

| | | | |
|---|---|---|---|
| 1. பிதா | ------------------------- | 2. தம்பி | --------------------- |
| 3. மாமா | ------------------------- | 4. சகோதரன் | --------------------- |
| 5. பெரியப்பா | ------------------------- | 6. மனைவி | --------------------- |
| 7. சின்னம்மா | ------------------------- | 8. மைத்துனன் | --------------------- |
| 9. மாணவி | ------------------------- | 10. நடிகை | --------------------- |

## செயற்பாடு VI

கீழ் கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமான சொற்களைத் தெரிந்து வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவோம்.

පහත සඳහන් වචනවලින් සුදුසු වචනය යොදා හිස්තැන් පුරවමු.

| பாடினாள், போனேன், விழுந்தது, பெய்தது, மேய்ந்தன |
|---|

**(உ + ம்) அம்மா சோறு சமைத்தார்**

1. நான் பாடசாலைக்குப் ------------------------------------------
2. கமலா பாட்டுப் ------------------------------------------
3. நேற்று மழை ------------------------------------------
4. மரம் முறிந்து ------------------------------------------
5. பசுவும், கன்றும், புல் ------------------------------------------

## செயற்பாடு VII

**பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுவோம்.**

පහත සඳහන් වචනවලට විරුද්ධ පද ලියමු.

**(உ + ம்)** பகல் - இரவு

1. காலை - --------------------------------------------
2. பொய் - --------------------------------------------
3. தீங்கு - --------------------------------------------
4. வா - --------------------------------------------
5. மகிழ்ச்சி - --------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு VIII

**ஒத்தக்கருத்துடைய சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோம்.**

සමාන පද තෝරා ලියමු.

(இல்லம், மனை, துக்கம், தனவந்தன், மெய், அரசன், வேந்தன், கவலை, செல்வந்தன், சத்தியம்)

**(உ + ம்)** சந்திரன் - மதி திங்கள்

1. மன்னன் --------------------------- - -------------------------------
2. வீடு --------------------------- - -------------------------------
3. உண்மை --------------------------- - -------------------------------
4. பணக்காரன் --------------------------- - -------------------------------
5. துன்பம் --------------------------- - -------------------------------

## செயற்பாடு IX

**பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுவோம்.**

**පහත සඳහන් වචනවලට විරුද්ධ ලිංග පද ලියමු.**

**(உ + ம்)** தந்தை - தாய்

| | | | |
|---|---|---|---|
| 1. அரசன் | --------------------- | 6. தோழன் | --------------------- |
| 2. நண்பன் | --------------------- | 7. பேரன் | --------------------- |
| 3. அன்னை | --------------------- | 8. கணவன் | --------------------- |
| 4. மங்கை | --------------------- | 9. புத்திரன் | --------------------- |
| 5. சேவகன் | --------------------- | 10. மைத்துனன் | --------------------- |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு X

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்து வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவோம்.
සුදුසු වචන යොදා වාක්‍ය සම්පූර්ණ කරන්න.

(விளையாடுவார்கள், சென்றேன், வளர்ந்தன, வீசியது, சாப்பிட்டான்)

**(உ + ம்) பூனை எலியைப் பிடித்தது.**

1. விமலன் சோறும் கறியும் ----------------------------------
2. காற்று வேகமாக ----------------------------------
3. மாணவர்கள் மாலை நேரத்தில் ----------------------------------
4. நான் கண்டிக்குச் ----------------------------------
5. செடிகள் நன்றாக ----------------------------------

## செயற்பாடு XI

பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுவோம்.

පහත සඳහන් වචනවලට විරුද්ධ පද ලියමු.

**(உ + ம்) இன்பம், துன்பம்**

| | | | |
|---|---|---|---|
| 1. ஒளி | ------------------------- | 6. ஏற்றம் | ------------------------- |
| 2. இலாபம் | ------------------------- | 7. புதுமை | ------------------------- |
| 3. உயர்வு | ------------------------- | 8. தண்ணீர் | ------------------------- |
| 4. சண்டை | ------------------------ | 9. ஞாபகம் | ------------------------- |
| 5. உள்ளே | ------------------------ | 10. காய் | ------------------------- |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு XII

பின்வரும் பயனிலைச் சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வாக்கியங்களை நிறைவு செய்வோம்.
**සුදුසු ආඛ්‍යාතය යොදා වාක්‍ය සම්පූර්ණ කරමු.**

குடிக்கின்றாய், குடிக்கின்றான், குடிக்கின்றீர், குடிக்கின்றேன்
குடிக்கின்றாள், குடிக்கின்றீர்கள், குடிக்கின்றோம், குடிக்கின்றார்
குடிக்கின்றன, குடித்தது, குடிக்கின்றார்கள்

1. நான் பால் ----------------------------------------------------
2. நாங்கள் பால் ----------------------------------------------------
3. நீ பால் ----------------------------------------------------
4. நீர் பால் ----------------------------------------------------
5. நீங்கள் பால் ----------------------------------------------------
6. அவன் தேநீர் ----------------------------------------------------
7. அவள் தேநீர் ----------------------------------------------------
8. அவர் தேநீர் ----------------------------------------------------
9. அவர்கள் கஞ்சி ----------------------------------------------------
10. அது கஞ்சி ----------------------------------------------------
11. அவை கஞ்சி ----------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக